மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

முன்னிலை : திருமதி.P.கோபால அரசி, பி.எஸ்சி., பி.எல்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ம் நாள் சனிக்கிழமை.

**I.A. No.179/2024 in O.S.No.26/2023**

பரமசிவன்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

இசக்கியம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 22.10.2024 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N. பாலகிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.டால்பின்ராஜ் அவர்களும் ஆஜராகி, இருதரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள வாதுரைகள் கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனு தபசில் சொத்தை நிலஅளவையர் உதவியுடன் அளந்து அதன் அம்சங்களையும், அமைப்புகளையும் அதில் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியுள்ள அழிமதியையும் அமைப்புகளையும் அதில் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியுள்ள அழிமதியையும் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி, உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

(1.1) இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கில் வாதி. மனுதாரர் அசல் வழக்கை பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு

தாக்கல் செய்துள்ளார். மனு தபசில் சொத்துக்களும் வேறு சொத்துக்களும் மனுதாரரின் தாத்தா பரமசிவன் தேவர் மற்றும் பாட்டி மாலையம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகும்.

(1.2) மனுதாரரின் தாத்தா மற்றும் பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தாங்கள் உயிரோடு இருந்த காலத்திலேயே தங்களின் வாரிசான மனுதாரரின் தாயார் அமச்சியார் அம்மாள், எதிர்மனுதாரர் மற்றும் பொன்னு ஆகியோர்களுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்துவிட்டனர். அதன் அடிப்படையில் மனு தபசில் சொத்து மனுதாரரின் தாயார் அமச்சியார் அம்மாளுக்கு ஒதுக்கப்பட்டு, மேற்படியார் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வந்தது.

(1.3) மனுதாரரின் தாத்தா பரமசிவ தேவர் கடந்த 05.05.1987 தேதியிலும், மனுதாரரின் பாட்டி மாலையம்மாள் கடந்த 09.12.1999 தேதியிலும் காலமாகிவிட்டார்கள். அதன் பின்பு, மனுதாரரின் தாயார் மனு தபசில் சொத்தை தனித்த உரிமையுடன் அனுபவித்து வந்த நிலையில், மனுதாரரை மட்டும் வாரிசாக விட்டு விட்டு கடந்த 30.05.2009 அன்று காலமாகி விட்டார். மனுதாரரின் தகப்பனார் இளையபெருமாள் தேவர் மனுதாரரின் தாயாருக்கு முன்பு 18.05.2001 தேதியில் காலமாகி விட்டார்.

(1.4) மனுதாரரின் தாயார் காலமான பின் மனுதாரர் மனு தபசில் சொத்தை வாரிசு நிலையில் அடைந்து விவசாயம் செய்து, தனது தாயாரை தொடர்ந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார். மனு தபசில் சொத்தில் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான உரிமையும், அனுபவமும் கிடையாது. மனு தபசில் சொத்தில் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் கிடையாது.

(1.5) ஆனால் எதிர்மனுதாரர் மனு தபசில் சொத்தை தன்னிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில், கடந்த 10.04.2021 முதல் மனு தபசில் சொத்தில் தனக்கும் உரிமை இருப்பதாக கூறிக்கொண்டு, மனு தபசில் சொத்தை மனுதாரர் அமைதியாக அனுபவிக்க முடியாதபடி, இடையூறு செய்து வந்தார். மேலும்

வருவாய் ஆவணத்தினையும், சட்ட விரோதமாக மோசடி ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்ய முயற்சித்து வந்தார்.

(1.6) எனவே மனுதாரர் எதிர்மனுதாரரின் சட்ட விரோத செயலுக்கு எதிராக கடந்த 23.04.2021 தேதியில், மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி வைத்தார். மனுதாரரின் அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர், மனு தபசில் சொத்தை மனுதாரரை அனுபவிக்க விடமாட்டேன் என்றும், அதனை அபகரித்தே தீருவேன் என்றும் கூறி வந்துள்ளார்.

(1.7) எனவே எதிர்மனுதாரரின் சட்ட விரோத செயலை தடை செய்யும் பொருட்டு மனு தபசில் சொத்து மனுதாரருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து, அதன் தொடர்ச்சியாக மனு தபசில் சொத்தை மனுதாரர் அமைதியாக அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரரோ, அவரது வகையறாக்களோ, எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கேட்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(1.8) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கில், எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி, மனு தபசில் சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக கூறி வீண் கட்சி செய்து வருகிறார். இந்நிலையில் கடந்த 24.03.2024 ல் மனு தபசில் சொத்திலும், மனுதாரரின் மற்ற சொத்திலும், அத்துமீறி நுழைந்து, மேற்படி சொத்திற்குள் மனுதாரர் நட்டு வைத்திருந்த சுமார் 100 வாழைக் கன்றுகளை பிடுங்கி போட்டு அழிமதி ஏற்படுத்தி விட்டார்.

(1.9) அதன் மதிப்பு சுமார் ரூ.30,000/–இருக்கும். எதிர்மனுதாரரின் செயல் தொடர்பாக மனுதாரர் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கெடுத்தார். ஆனால் மனு தபசில் சொத்து தொடர்பாக வழக்கு நடைபெற்று வரும் விபரம் அறிந்த காவல்துறையினர் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர்.

(1.10) எனவே மனு தபசில் சொத்து, மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களுடன் சேர்ந்து, மனுதாரர் அனுபவத்தில் இருந்து வரும் விபரத்தையும், மனு தபசில் சொத்து மற்றும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்தில் உள்ள

வாழை கன்றுகளை எதிர்மனுதாரர் பிடுங்கி ஏற்படுத்தியுள்ள அழிமதியையும், அதில் ஏற்படுத்தியுள்ள இழப்பு தொகை விபரங்களையும் கணக்கீட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு, ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச்சுருக்கம்:–</u>**

(2.1) மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு பிரமத்திலேயே தள்ளுபடி செய்யப்படக்கூடியதாகும். உண்மையில் மனுதாரர் அசல் வழக்கை விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனு தபசில் சொத்தின் அமைவிடம் குறித்தோ அல்லது விஸ்தீரணம் குறித்தோ எவ்வித தாவாவும் கிடையாது.

(2.2) மனு தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா அல்லது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா என்பதை அசல் வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பொருண்மை ஆகும். எனவே தாவா வழக்கில் நிலஅளவையர் மூலம் தபசில் சொத்தை அளப்பதோ அல்லது மனு தபசில் சொத்தின் அமைப்பு மற்றும் அம்சங்களை பார்வையிடுவதோ எவ்வித பலனையும் அளிக்காது.

(2.3) மனுதாரர் மனு தபசில் சொத்தில், அனுபவத்தை காட்டுவதற்கு தாவா மனுவை தாக்கல் செய்வதாக அவரது அபிடவிட்டில் தெரிவித்துள்ளார். விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் உள்ள வழக்கில் மனு தபசில் சொத்தின் அமைவிடம் மற்றும் விஸ்தீரணம் குறித்த எழுவினா இல்லாதபோது அனுபவத்தை காட்ட ஆணையரை நியமிக்க கேட்க இயலாது. எனவே சட்டமுரணாக தாக்கல் செய்துள்ள தாவா மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

(2.4) மனு தபசில் சொத்து மனுதாரரின் அனுபவத்தில் ஒருபோதும் இருந்தது கிடையாது. நீதிமன்றத்தை குழப்ப வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில், வழக்கிற்கு சம்பந்தபடாத மற்ற சொத்துக்களுடன், மனு தபசில் சொத்தையும் அளக்க கேட்பது மனுதாரரின் கெட்ட உள்நோக்கத்தை காட்டுகிறது. எனவே, மனுதாரரின், மனு தள்ளுபடி செய்யக்கூடியதாய் ஊள்ளது.

(2.5) தாவா வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தில், மனுதாரர் தாவா மனுவையும் சீர்திருத்த மனுவையும் தாக்கல் செய்துள்ளார். அதனையிட்டும் தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது. தாவா மனு அனுதிக்கப்பட்டால் எதிர்மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும் அதனையிட்டும் தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியதாய் இருக்கிறது. எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

<u>4) தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை</u> :–

ஆணையர் நியமனம் அவசியமானதா? மற்றும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>5) தீர்வு :</u>

(5.1) அசல் வழக்கானது, வழக்கு தபசில் சொத்துக்களும், வேறு சொத்துக்களும் பரமசிவன் தேவர்– மாலையம்மாள் தம்பதிகளுக்கு ஆதியில் பாத்தியப்பட்டு, மேற்படியார் உயிருடன் இருந்த காலத்திலேயே, அவர்களின் வாரிசான வாதியின் தாயார், பிரதிவாதி மற்றும் பொன்னு ஆகியோர்களுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்ததன் அடிப்படையில், வழக்கு தபசில் சொத்து வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டு, அவரது காலத்திற்கு பிறகு வாதி, வழக்கு தபசில் சொத்தை வாரிசு நிலையில் அடைந்து விவசாயம் செய்து, சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் நிலையில், பிரதிவாதி கடந்த 10.04.2021 முதல் வழக்கு தபசில் சொத்தில் தனக்கும் உரிமை இருப்பதாக கூறிக்கொண்டு, வழக்கு தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருவதால், வழக்கு தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வாதியால் 28.02.2023 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.2) அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், வழக்கு 1வது தபசில் சொத்தின் உரிமையாளர் மலையம்மாள்

என்றும், அவரது காலத்திற்கு பிறகு மேற்படி வழக்கு 1வது தபசில் சொத்து வாரிசு அடிப்படையில் வாதியின் தாயார் அம்மாச்சியர், பிரதிவாதி மற்றும் பொன்னு ஆகியோர்களுக்கு சமமாக மூன்று பங்குகளாக பிரிக்கப்பட்டு, பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் மறுத்துள்ளார்.

(5.3) மேலும், எதிர்வழக்குரையில், வழக்கு 2வது தபசில் சொத்தின் உரிமையாளர் பரமசிவன் தேவர் என்றும், அவரது காலத்திற்கு பிறகு மேற்படி வழக்கு 2 வது தபசில் சொத்து வாரிசு அடிப்படையில், வாதியின் தாயார் அம்மாச்சியர், பிரதிவாதி மற்றும் பொன்னு ஆகியோர்களுக்கு சமமாக மூன்று பங்குகளாக பிரிக்கப்பட்டு, பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், வழக்கு தபசில் சொத்தில் தனக்கும் பங்கு இருப்பதாகவும், எனவே, வாதி மட்டும் வழக்கு தபசில் சொத்தை அனுபவிப்பதற்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

(5.4) அசல் வழக்கில் 21.11.2023ல் எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்காக 20.12.2023 முதல் 25.03.2024 வரை வாய்தா போடப்பட்ட நிலையில், மனு தபசில் சொத்து, மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களுடன் சேர்ந்து, மனுதாரர் அனுபவத்தில் இருந்து வரும் விபரத்தையும், மனு தபசில் சொத்து மற்றும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்தில் உள்ள வாழை கன்றுகளை எதிர்மனுதாரர் பிடுங்கி ஏற்படுத்தியுள்ள அழிமதியையும், அதில் ஏற்படுத்தியுள்ள இழப்பீடு தொகை விபரங்களையும் கணக்கீட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு, ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டி, மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(5.5) மேற்படி மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் மனு தபசில் சொத்தின் அமைவிடம் குறித்தோ அல்லது விஸ்தீரணம் குறித்தோ எவ்வித தாவாவும் கிடையாது என்றும், மனு தபசில் சொத்தின் அமைவிடம் மற்றும் விஸ்தீரணம் குறித்த எழுவினா இல்லாதபோது, அனுபவத்தை காட்ட ஆணையரை நியமிக்க கோர முடியாது என்றும், அசல் வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்

குறிப்பிடப்பட்டுள்ளது.

(5.6) இம்மனுவில் மனுதாரர் மனு தபசில் சொத்து மனுதாரர் பயிரிட்டுள்ள வாழைக்கன்றுகள் 100 கன்றுகளை எதிர்மனுதாரர் 24.03.2024 ல் வழக்கு சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து பிடுங்கி ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி அழிமதியையும், அதில் ஏற்படுத்தியுள்ள இழப்பீடு தொகை விபரங்களையும் கணக்கீட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரியுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் வாழையை சேதப்படுத்திவிட்டதாக கற்பனையாக மனுதாரர் கூறுவதாக மறுத்துள்ளார்.

(5.7) வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்தும், வழக்கு சொத்தின் அனுபவமும் யாரிடம் உள்ளது என்பது குறித்தும், வழக்கு சொத்து அழிமதி செய்யப்பட்டுள்ளதா, அவ்வாறென்றால் மேற்படி அழிமதியை எதிர்மனுதாரர்தான் செய்தாரா, என்பது குறித்தும் வழக்கு விசாரணைக்கு பின்னரே தீர்மானிக்க முடியும். இம்மனுவில் மனுதாரர் மேற்படி அழிமதி மற்றும் அதனால் ஏற்படுத்தியுள்ள இழப்பீட்டிற்கான தொகை ஆகியவற்றை மட்டுமே கண்டறிய ஆணையர் நியமனம் கோரியுள்ளார்.

(5.8) எனவே, மேற்படி ஆணையர் நியமனம் அனுபவத்தை கண்டறிவதோ, சாட்சிகளை திரட்டுவதோ ஆகாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனு அனுமதிக்கப்படுவதால், எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், வழக்குவிசாரணையின் முடிவில் அழிமதி நிரூபிக்கப்பட்டால் அதற்கான இழப்பீடு தொகையை இந்நீதிமன்றம் அறிவதற்கு மேற்படி ஆணையர் நியமனம் உதவியாக இருக்கும். எனவே, ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை, அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(5.9) இறுதியாக இம்மனு, செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு.G.ராமச்சந்திரன் இம்மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். ஆணையர் இரு தரப்பிலும் அறிவிப்பு கொடுத்து, மனு தபசில் சொத்துக்களை தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் அதன் இயற்கை

அமைப்புகளை பார்வையிட்டும், வழக்கு சொத்தில் உள்ள வாழை கன்றுகளில் ஏற்பட்டுள்ள அழிமதியையும் மற்றும் இழப்பீடு தொகை விபரங்களையும் கணக்கீட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு, விரிவான அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்ய பணிக்கப்படுகிறார். ஆணையர் ஊதியம் ரூ.8,000/-ஆக நிர்ணயிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரி பார்க்கப்பட்டு 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 09ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-P.கோபால அரசி, 09.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>இரு தரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை</u>

ஒம்/-P.கோபால அரசி, 09.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

District Munsif, Sathankulam.

I.A.No.179/2024

in O.S.No.26/2023.

Draft/fair Order

Date:-09.11.2024